# தேர்தல் முறை சீர்திருத்தம் ஒத்திவைப்பு மனோவிடம் ரணில், விஜயதாஸ உறுதி

## புதிய நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்படுமாம்!



"தேர்தல் முறை சீர்திருத்தம், எதிர்வரும் தேர்தல்களைத் தொடர்புபடுத்தாது. இவ்விவகாரம் அடுத்து வரும் நாடாளுமன்றத்துக்கு ஒத்தி வைக்கப்படும். அது பற்றி புதிய நாடாளுமன்றத்தில் கலந்துரையாடுவோம்,என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் என்னிடம் உறுதியளித்துள்ளனர்." – என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது பற்றி ஊடகங்களிடம் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது– "தற்போதைய விகிதாசார தேர்தல் முறையை மாற்றும் சீர்திருத்தம் தேவையற்றது என்ற நிலைபாட்டை தமிழ் முற்போக்குக் கூட்டணி அன்று முதல் எப்போதும் கொண்டுள்ளது. இதுவே எமது நிலைபாடாக நாடாளுமன்றத் தேர்தல் சீர்திருத்த தெரிவுக்குழுவிலும் தொடர்ச்சியாக இருந்துள்ளது.

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 21 புதன்கிழமை 03.04.2024 கதிர் 218

# மன்னார் பொலிஸ் நிலையத்தில் குடும்பஸ்தர் மீது கொடூர தாக்குதல்



மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இணைந்து இன்று காலை மன்னார் பொலிஸ் நிலையம் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மீது கடுமையான தாக்குதல் மேற்கொண்டுள்ள நிலையில் மேற்படி குடும்பஸ்தர் காயங்களுக்குள்ளான நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மன்னார், பள்ளிமுனை கிராமத்துக்கு நேற்று மாலை மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸார் சென்று பிறிதொரு நபரின் பெயரைக் கூறி அவரை விசாரித்துள்ளனர்.

2➤

# மக்களது ஆதரவை நிரூபித்துக் காட்டுவதற்கே மொட்டுக் கட்சி பொதுத் தேர்தலை கோருகிறது

## எதிர்க்கட்சிகள் அஞ்ச வேண்டியதில்லை என்கிறார் வீரசிங்க எம்.பி.



"பொதுத் தேர்தலை முதலில் நடத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கோருவதன் காரணம், நாட்டில் மக்கள் ஆணை இல்லாத ஓர் அரசாங்கமே தற்போது ஆட்சியில் இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருவதனால், மக்கள் ஆணையை நிரூபிக்க வேண்டிய தேவை இருப்பதானால் தான்" என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி. வீரசிங்க தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் ஒன்றே நாட்டு மக்களின் கருத்தைச் உரசிப்பார்ப்பதற்கான

2➤

# ரணில் யானை சின்னத்தில் போட்டியிட்டால் ஆதரிக்க மாட்டேன் நாமல் போட்டியிட்டால் அரசியலில் நான் மௌனம் காப்பேன்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் யானை சின்னத்தில் போட்டியிட்டால் அவருக்கு ஆதரவளிக்க போவதில்லை என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராக முன்வைத்தால் அவருக்கு ஆதரவளிக்கப் போவதில்லை எனவும் அப்படியாயின் தான் அரசியலிலிருந்து மௌனித்து விடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ பொதுச் சின்னத்தில் தேசிய வேட்பாளராக ஜனாதிபதித்

2➤

# நஷ்டத்தில் இயங்கும் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு நான்கு விமானங்கள் குத்தகை அடிப்படையில் பெறப்படவுள்ளன



நஷ்டத்தில் இயங்கும் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு 7 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் மாதாந்த தவணை அடிப்படையில் செலுத்தும் விதமாக இன்னும் நான்கு விமானங்களை குத்தகைக்கு பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவற்றில் இரண்டு விமானங்கள் 6 ஆண்டுகளுக்கு 360,000 அமெரிக்க டாலர் குத்தகை அடிப்படையிலும், ஏனைய இரண்டு விமானங்கள் 8 ஆண்டுகளுக்கு 365,000 அமெரிக்க டாலர்கள் குத்தகையிலும் பெறப்படவுள்ளது.

நேற்று (02) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இது குறித்து அமைச்சரவை ஊடக பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

2➤

# வருடாந்தம் 120 மில்லியன் பேனாக்கள் விற்பனையாகின்றன் இதனால் 80 தொன் பிளாஸ்டிக் சுற்றுச் சூழலில் கலக்கின்றது!

வருடமொன்றிற்கு 120 மில்லியன் பேனாக்கள் சந்தையில் விற்பனைக்கு விடப்படுவதாகவும், இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு வெளியாகும் பிளாஸ்டிக்கின் எடை 80 தொன்கள் எனவும் சுற்றுச்சூழல் தொடர்பான கண்காணிப்பு குழுவின் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பேனாக்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவிடம் மேற்படி கண்காணிப்புக் குழு இது குறித்து வினவியபோது, உற்பத்தி செய்யப்படும் மொத்த பேனாக்களின் எடையைக் கருத்திற் கொள்வதன் மூலம், அவை சுமார் 80 தொன் பிளாஸ்டிக்கை கொண்டிருக்கலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், பேனாவின் எடையில் பெரும்பகுதி அதன் மை மற்றும் குமிழ் முனை ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், பேனா தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மூலப்பொருட்களை மீள்சுழற்சி செய்வது கடினமானது எனவும், நமது நாட்டில் அவற்றை மீள்சுழற்சி செய்யும் வசதிகொண்ட

2➤

# விசேட தேவையுடைய சிறுவர்களைக் கொண்ட சகல பாடசாலைகளிலும் மதிய உணவு வழங்க பணிப்புரை

## -கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் தெரிவிப்பு

விசேட தேவையுடைய சிறுவர்களைக் கொண்ட சகல பாடசாலைகளிலும் மதிய உணவு வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் நேற்று (2) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இது தொடர்பாக உரிய 27 பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் நிவாரணங்களை பெறுகின்ற விசேட தேவையுடைய பிள்ளைகளைக்கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 27 எனவும், இதில் 2800 சிறுவர்கள் உள்ளதாகவும், இவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் சீருடைகள் கிடைத்த போதிலும் அவர்களுக்கு மதிய உணவு கிடைப்பதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்ததுடன், இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ரெசி-19)

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது அந்த வீட்டில் தாக்குதலுக்குள்ளான பிரதீபன் (வயது - 42) என்ற குடும்பஸ்தர் இருந்துள்ளார்.

அங்கு சென்ற பொலிஸார் வீட்டின் உரிமையாளரைக் கேட்டபோது அவர் இல்லை எனத் தெரிவித்துள்ளனர். உடனடியாக மேற்படி குடும்பஸ்தரின் இரு கையடக்கத் தொலைபேசிகளையும் பறித்த பொலிஸார், அவருடைய மோட்டார் சைக்கிளையும் எடுத்துக்கொண்டு மன்னார் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இந்தநிலையில், அந்தக் குடும்பஸ்தர் இன்று காலை மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யச் சென்றுள்ளார்.

இதன்போது அங்குள்ள அதிகாரிகள் மன்னார் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாட்டைப் பதிவு செய்து விட்டு வருமாறு தெரிவித்தனர்.

இந்தநிலையில் அவர் மன்னார் பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

அவரின் மோட்டார் சைக்கிளின் ஆவணங்களைப் பொலிஸார் கேட்டுள்ளனர். இதன்போது ஆவணங்களைப் பொலிஸாரிடம் அவர் வழங்கியுள்ளார்.

பின்னர் தனது கையடக்கத்தொலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிளை அவர் கேட்டபோது மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூரிய ஆயுதத்தால் அவரைப் பல தடவைகள் தாக்கினார். அங்கு நின்ற தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் மேற்படி குடும்பஸ்தரைத் தாக்கினார்.

இதனைப் பொலிஸ் நிலையம் வந்த பொதுமக்கள் மற்றும் ஏனைய பொலிஸார் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரும் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டனர். என்னிடம் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளவில்லை. என்னிடம் பறித்த பொருட்களையும் அவர்கள் தரவில்லை. என்னை அங்கிருந்து போகச் சொன்னார்கள். நான் காயங்களுடன் வைத்தியசாலைக்கு வந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன்." - என்று பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தெரிவித்தார்.

மேற்படி குடும்பஸ்தர் மன்னார் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து அவரது மனைவி மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (அ)

## தேர்தல் முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அன்றைய அமைச்சர், இன்றைய பிரதமர் தினேஷ் குணவர்தன, தலைமையில் கடைசியாக இடம்பெற்ற தேர்தல் சீர்திருத்த தெரிவுக்குழுவில், தேர்தல் முறை சீர்திருத்தம் தொடர்பில் ஏகமனதாக தீர்மானம் ஏற்பட்டது போன்ற தோற்றப்பாட்டை அரசு காட்ட முயல்கின்றது. இது பச்சைப் பொய்.

பதினாறு உறுப்பினர்களில் சரிபாதி எட்டு எதிர்கட்சி உறுப்பினர்கள் தெரிவுக்குழு அறிக்கையை நிராகரித்து, அறிக்கையில் கையெழுத்திட மறுத்து விட்டோம். அங்கே ஏற்பட்ட ஒரேயோரு ஏகமனதான தீர்மானம், சட்டத்தைத் திருத்தி, விகிதாசார முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்பதாகும். அதையும்கூட அரசு செய்யவில்லை. இந்நிலையில் திடீரென அமைச்சரவையில் தேர்தல் முறை சீர்திருத்தம் வேண்டும் என்று ஒரு நாள், பிறகு இப்போது வேண்டாம் என்று இன்னொரு நாள் தீர்மானிப்பது கேலிக்கூத்து ஆகும்.

இந்நிலையில் கடந்த வாரம் ஜனாதிபதியை நான் சந்தித்தபோது இது தொடர்பில் தற்போது முன்னெடுப்புகள் இல்லை என்றார். அதேபோல், சில தினங்களுக்கு முன் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவைச் சந்தித்தபோது அவரும் இதையே எனக்குத் தெரிவித்தார். ஆகவே, இந்தப் பிரச்சினை இப்போதைக்கு முடிவுக்கு வருகின்றது.

இந்நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சுமார் 60 விகிதமானோர் பல மாவட்டங்களில் சிதறி வாழ்கின்றார்கள். எனவே, எமது மக்களைப் பாதிக்கும் எந்தவொரு அடாத்தான, தன்னிச்சையான தேர்தல் முறை மாற்றங்களையும் நாம் ஏற்க மாட்டோம். விகிதாசார முறையை மாற்றாமல் உள்ளக மாற்றங்களைப் பற்றி வேண்டுமானால் நாம் பேசலாம். இது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தொன்று தொட்டு வரும் நிலைபாடு ஆகும். எதிர்வரும் தேர்தல்களில் பெரும்பான்மை கட்சிகளுடன் உடன்பாடுகள் காணும்போது இதுவும் எமது பிரதான நிபந்தனைகளில் ஒன்றாக இருக்கும்." - என்றார். (அ)

## மக்களது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரே மார்க்கம் எனத் தெரிவித்த அவர் அவ்வாறான தேர்தலுக்கு எதிர்க்கட்சிகள் அஞ்ச வேண்டியதில்லையே எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்- "மக்களின் கருத்தை அறிந்து அதற்கேற்ப முன்னோக்கிச் செல்லக்கூடிய அரசாங்கமொன்றை அமைத்தால் நன்றாக இருக்கும் என நாம் இந்த தருணத்தில் நம்புகின்றோம். இருப்பினும், அரசியலமைப்பின்படி ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என்பதால் முதலில் எந்தத் தேர்தல் நடத்தப்படும் என்பது உறுதியாகத் தெரியவில்லை" என்றார். (ரெசி-15)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிந்தவரையில் நாமல் ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடுவது குறித்து கட்சியில் எந்த பேச்சும் நடைபெறவில்லை, அவ்வாறானதொரு நிலைக்கு வருவதற்கு அவர் மேலும் அனுபவம் பெற வேண்டும், அவர் ஜனாதிபதியாக வருவதற்கு நாமலுக்கு இன்னும் கால நேரம் உள்ளது. இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்சவை வேட்பாளராக நிறுத்தினால் நான் அவருக்கு உதவ மாட்டேன். நான் அரசியலில் மௌன நிலைக்கு சென்று விடுவேன்" என்றார். (ரெசி-16)

## நஷ்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு ஐந்து அகன்ற விமானங்கள் தேவைப்படுவதாகவும், அதன்படி 4 விமானங்களைப் பெறுவதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், கொள்வனவு செய்யப்படும் விமானங்களின் அளவு குறித்து அமைச்சரவைக்கு போதிய தெளிவு இல்லை என ஊடகவியலாளர்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சமர்ப்பித்ததுடன், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் நிலையியற் கொள்முதல் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (ரெசி-17)

## வருடாந்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எந்தவொரு நிறுவனமும் இல்லை எனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்படி நாட்டில் வருடாந்தம் பேனாக்களின் மூலம் பெருமளவு பிளாஸ்டிக் சுற்றுச்சூழலில் கலப்பது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது. (ரெசி-18)

# வாகனம் மோதி குடும்பஸ்தர் பலி

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறுக்கலை பகுதியில் வாகனம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 39 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

கலஹா - கண்டி பிரதான வீதியில் மேற்படி நபரை மோதிவிட்டு வாகனம் சென்றுள்ளது. இதனால் படுகாயமடைந்த நபர் வீதியில் வீழ்ந்து கிடந்துள்ளார்.

அருகில் உள்ள மக்கள் சத்தத்தைக் கேட்டு அங்கு சென்று காயமடைந்திருந்த 39 வயது நபரை, 1990 அம்புலன்ஸ் வாகனத்தை வரவழைத்து கம்பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தனர். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணை கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சீன வெங்காயமும் இலங்கையில்

*முதன் முறையாக சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தை புறக்கோட்டை மொத்த சந்தையில் கொள்வனவு செய்ய முடியும் என இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*ஒரு கிலோ சீனப் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை சுமார் 320 ஷரூபாய் எனவும் அவை நல்ல நிலையில் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் தடை விதித்ததையடுத்து, இலங்கையிலுள்ள இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் கடும் நெருக்கடிக்கு ஆளானதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ரெசி–20)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# யாழில் இரு கூட்டங்களில் பங்கேற்கிறார் அநுரகுமார



யாழ்ப்பாணத்தில் நாளைய தினம் (04) இடம்பெறவிருக்கும் தேசிய மக்கள் சக்தியின் ஆசிரியர்களின் அபிமானமிகு வடமாகாண மாநாடு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட வங்கி மற்றும் நிதி அமைப்பின் மாநாடு ஆகிய இரு நிகழ்வுகளில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க அவர்கள் பங்கேற்கவுள்ளார்.

அதன் முதல் நிகழ்வாக, ஆசிரியர்களின் அபிமானமிகு வடமாகாண மாநாடு பிற்பகல் 1.30 க்கு யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டல் சங்கிலியன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

"இழக்கப்படுகின்ற கல்வி உரிமைகளை வென்றெடுப்போம்! ஆசிரியர் - மாணவர்களின் உரிமைகளை வென்றெடுப்பது எப்படி?" எனும் கருப்பொருளில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தினால் ஏற்பாடு செய்ப்பட்டிருக்கும் இந்த மாநாட்டில் அச்சங்கத்தின் செயலாளர் தோழர் மஹிந்த ஜயசிங்க மற்றும் தேசிய அமைப்பாளர் தோழர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதனையடுத்து யாழ்ப்பாண மாவட்ட வங்கி மற்றும் நிதி அமைப்பின் மாநாடு பிற்பகல் 6.30 மணிக்கு ரில்கோ ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் தோழர் வசந்த சமரசிங்க, தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தோழர் இராமலிங்கம் சந்திரசேகர், வங்கி மற்றும் நிதி அமைப்பின் உறுப்பினர்களான தோழர் சமீர அல்விஸ், தோழர் சதானந்தம் நேசராஜன் மற்றும் தோழர் பூலோகராஜா ஸ்ரீதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# அஸ்வெசும' கிடைக்காத 4 மாவட்டங்களுக்கு புத்தாண்டுக்கு முன் வழங்குவதற்கு ஏற்பாடு

## நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய



நான்கு மாவட்டங்களில் 'அஸ்வெசும' நிவாரணம் கிடைக்காத அனைவருக்கும் இந்த சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் நிலுவைத் தொகையுடன் மேற்படி 'அஸ்வெசும' நிவாரணம் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார். கேகாலை, நுவரெலியா, பதுளை, பொலன்னறுவை ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கே இவ்வாறு 'அஸ்வெசும' வழங்கப்படுவதாகவும், 2,500 ஷரூபா கொடுப்பனவைப் பெறுவதற்கு இப்பகுதியை சேர்ந்தோர் தகுதி பெற்றிருந்த போதிலும், சில நடைமுறை பிரச்சினைகள் காரணமாக உரியவர்களுக்கு இந்த 04 மாவட்டங்களிலும் இதுவரையில் மேற்படி நிவாரண தொகை வழங்கப்படாமல் இருந்தது என நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

அதாவது, இந்த மாவட்டங்களில் 'அஸ்வெசும' பெறுவதற்கு தகுதியானவர்களை இனங்காணும் தேர்வின் போது குறைந்த மதிப்பெண் பெற்ற அதிகளவினரின் பெயர்களும் பதிவேடுகளில் சேர்க்கப்பட்டிருந்ததோடு, அந்த மாவட்டங்களுக்கான ஒதுக்கீடு செய்வதற்கான தொகை அதிகமாக இருந்ததாலும் இந்த பிரச்சினை எழுந்ததாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ரெசி-)

# ஜனாதிபதி – பொதுத் தேர்தல்கள் ஒரே நாளில் நடத்த ஆலோசனை



ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை ஒரே நாளில் நடாத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தமக்கு தகவல் அறிய கிடைத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடாத்துவதற்கு சட்டத்தில் எவ்வித தடையும் இல்லை, எனவும் அவர் கூறியுள்ளார்.



# மிதி வெடி

*,ராமநாதனார் ,ப்ப உயிரோட ,ருந்திருந்தால்...... பாவம் மனுசன் தூக்கு மாட்டித் தொங்கி ,ருக்கும்...*

*தான் வாழ்ந்த வீடு, மனை உட்படத் தன்னட்ட ,ருந்ததுகள் அத்தனையையும் "கம்பஸ்"க்கு எழுதி வைச்ச மனுசன்.. தனக்குப் பிறகு நாலு பேர் பயன்பெறட்டும் எண்டு தானே எல்லாத்தையும் விட்டுட்டுப் போனது.... அந்த மனுசன் குடுத்துட்டுப் போனதாலயோ என்னவோ அந்த மனுசன்ர பெயரில ஒரு பீடம் ,யங்குது.... பெயர் மட்டும் தான் அவற்ற மற்ற படி அங்க நடக்கிற அட்டாதுட்டியளைக் கேப்பாரில்ல....*

*கள்ளப் பெண்டாட்டி வைச்சிருக்கிறதில ,ருந்து கந்து வட்டிக்காரன் வரையும் அங்க தான் ,ருக்கிறாங்கள்.... "அக்கடமி"யா ,ருந்தது "பகல்டி"யா அறிவிக்கப்பட்டது மட்டும் தான் அங்க நடந்த முன்னேற்றம்... மற்ற படி உள்ள நாட்டுக் கொள்ளைக்காரருக்கெல்லாம் அது தான் புகலிடம்... ஏன் அண்மையில கூடப் பாத்திருப்பியள்.... ஒருத்தி குலுக்கிப் போட்தை மற்றவர் எப்பிடி எடுத்தார்.. எண்டு. அதானுங்கோ வேலை நேரத்தில சீட்டுக் குலுக்கிப் போட்டதைச் சொன்னன்.*

*சீட்டு எண்டது சட்ட விரோதம்.... அதிலும் ஒரு அரசாங்க நிறுவனத்தில... வேலை நேரத்தில சீட்டாடினது சரியே? அது மட்டுமா அங்க நடக்குது?*

*அறா வட்டிக்குக் கடன் குடுபடுகுது.... வட்டியோ முதலோ சரியான நேரத்துக்கு வச்சான் வச்சபடி வரேல்ல எண்டா... கட்டைப் பஞ்சாயத்து வேற.... உமையொருபானனின் ஷரூபமானவர் கடும் பிடியான ஆள் தானாம், ஆனாலும் அவரும் மனுசன் தானே.... ஆசை... பாசம் எல்லாம் அவருக்கும் ,ருக்கும் தானே... அது தானோ என்னவோ சில விசியங்களைக் கண்டும் காணாமல் ,ருக்கிறார் போல.....*

*உவரைப் பீடாதிபதியா வர விடக் கூடாது எண்டு நாண்டு கொண்டு நிண்ட "வீரிய" குமார் தான் ,ப்ப அங்க எல்லாக் குழப்பத்துக்கும் காரணமாம்... கொஞ்சம் பக்த்து வீட்டுக்காரரிண்ட கடைக்கண் பட்டிருந்ததால அவருக்கு அங்க ,ருக்கிறவை பயமாம்.... கலை எண்டு வந்துட்டால்... எந்தப் படிப்பெண்டாலும் அயல்நாட்டுக்குப் போய்த் தானே படிக்க வேணும்... அப்பிடி எண்டால்... "ஸ்கொலசிப்" கிடைக்கிறதில ,ருந்து... "விஸா" விண்ணப்பம் வரை "வீரி" மனம் வைக்க வேணும் எண்டதொரு நிலமை ,ருந்ததால அங்கத்தைப் பெண்டுகள் அத்தனை பேரும் "வீரி" யைக் கண்டால் கொஞ்சம் வீரியம் கெட்டுப் போய்த் தான் ,ருந்தவையாம்..... ,ப்ப "எம்பசி" ப் பக்கத்தில "வீரி"க்குக் காத்துக் கழட்டுப்பட்டுட்டுதாம். முழு பகல்டி"யையும் ஆட்டிப் படைச்சுக் கொண்டு திரிஞ்சவர் ,ப்ப தன்ர "டிப்பாட்மென்டு"க்குள்ள மட்டும் பாட்டுப்பாடுறார்.... மொத்தம் பதினைஞ்சு பேர் ,ருக்கிற தன்ர "டிப்பாட்மென்ட்" ல ஒரு ஆறு பேரை வைச்சுக் கொண்டு கடும் ஆட்டம் போடுறார்.*

*தன்னோட படிப்பிக்கிறவை மாத்திர மில்ல "கல்வி ,ல்லாத" - அதானுங்கோ "நொண் அக்கடமி ஸ்ராஃவ்" மட்டத்திலயும் சலசலப்பை ஏற்படுத்தி விடடிருக்கிறாராம்... "பகல்டி" நிர்வாகம் சரியா ,யங்கப்படாது எண்டது தான் அவற்றை நோக்கம்.... ,துக்குள்ள தன்ர "டிப்பார்ட்மென்ட்" தலையைக் கலைச்சுட்டால் தான் தலையா வந்திடலாம் எண்டும் ஒரு சின்னப் பிளான்... ,ப்ப "ஹெட்" ஆ வந்தால் தான் பிறகு "டீன்" ஆகலாம் எண்ட கனவு.... "ஒரு கல்லில் ,ரு மாங்காய்" அடிக்கிற "பிளான்".*

*"டீன்" கனவு எண்டோண்ண ,ன்னுமொரு விசியம் ஞாபகம் வருகுது.... அஞ்ஞானமில்லாத பீடத்தில மாணவர்களைப் பரீட்சை எழுத விடாத விசியம் கடுமையான ,ழுபறியில போய் நிக்குதாம்... ,ப்ப ,ருக்கிற "டீன்" பதவியை விட்டுப் போனால் தான் அடங்கும் போல கிடக்குது.... ""அண்ணன் எப்ப போவான் திண்ணை எப்ப காலியாகும்..." எண்டது போல அவரைக் கலைக்கிறதுக்கு ,ந்த விசியத்தைச் சாட்டாப் பாவிக்குது ஒரு கூட்டம்...*

*சண்டைக் காலத்தில விரிவுரைகள் ஒழுங்கில்ல... ,டம்பெயர்வு அது.. ,துவெண்டு நாலு வருசப் படிப்பை ஏழெட்டு வருசத்தில தான் பிள்ளையள் முடிச்சதுகள்... அப்பிடி.. அந்தக் காலத்தில படிச்சுப் பட்டம் பெற்ற பல பேர் தான் ,ப்ப அங்க படிப்பிக்கினம்... அவை ஒவ்வொருத்தரும் தாங்கள் கடந்து வந்த பாதையைக் கொஞ்சம் திரும்பிப் பாத்தால் எல்லாம் முடிவுக்கு வரும் பாருங்கோ....*

*பாவம் பிள்ளையள்... பெரியவயின்ர "நீயா - நானா" போட்டியால ,ப்ப மாசக் கணக்காப் பரீட்சை எழுதாமல் ,ழுபடுகுதுகள்... பரீட்சை ,ழுபட்டால், படிப்பு ,ழுபடும்.... படிப்பு ,ழுபட்டால் பட்டம் ,ழுபடும்... ,ந்த அடிப்படை விசியம் கூடத் தெரியாமல் ,ங்க ,ருக்கிறதுகள் தங்கட பஞ்சாயத்துக்காகப் பிள்ளையளைப் பந்தடிக்குதுகள்... பாவம் பிள்ளையள்....*

*விடாதேங்கோ.... உங்கள் எல்லாரையும் "எக்ஸாம்" எழுத விட வேணும் எண்டு சொல்லிப் பெடியளை உசுப்பேத்தி விட்டவர் தானாம் "பகல்டிபோட்"ல உவங்களை விடக் கூடாது... அவை "கோர்ட்"டுக்கு வேணுமெண்டாப் போகட்டும் எண்டு அடம் பிடிச்சவராம்.... "பீடச் சபை - பேரவை - மூதவை" எண்டு நாலு சுவருக்குள்ள நாசூக்காய்க் கதைத்து முடிக்க வேண்டிய விசியத்தை நாலு பேர் கதைக்கச் செய்து சந்தி சிரிக்க வைக்கிறதில எவ்வளவு ஆனந்தம் பாருங்கோ....?*

*"நல்ல தொரு குடும்பம் பல்கலைக்கழம்" எண்டு சொல்லுறவை..... குடும்பத்தை நல்ல முறையில நடத்தத் தெரியாத ஆக்கள் எப்பிடிப் பல்கலைக்கழகத்தை நடத்துவினம்....? ,ல்ல.. தெரியாமல் தான் கேக்கிறன்...? ஏன் உள்ளுக்குள்ள ,ருக்கிற சிவனுக்கு மூண்டு நேரமும் பூவைச்சுப் பூசை செய்ய ஒழுங்கா ஒரு ஆளைப் பிடிக்கேலாமல் நிக்கினமெண்டாப் பாருங்கோவன்?*

*,ப்பிடி எல்லா ,டமும் ,ழுபறிப்படேக்க தலைமைப் பீடம் என்ன பாத்துக் கொண்டே ,ருக்குதுகள்? உங்களுக்கு வாற அதே சந்தேகம் தான் எனக்கும் வருகுது... ஊரெல்லாம் பாடித் திரியுற தலைமை வாத்தியாரால உதுகளைக் கட்டுப்படுத்த முடியேல்லப் போல தான் கிடக்குது....*

*"பசு என்றால் பால் தர வேணும், பால் கறக்காத மாடுகள் எல்லாம் ஏன் "பார்ளிமென்ற்" போகுதுகள் எண்டு எங்கட எம்.பி மாரின்ர கையாலாகாத் தனத்தைப் பட்டவர்த்தனமாய் "பப்ளிக்ல" கிளிச்சுத் தொங்கப் போட்டவருக்கு தான் வளர்க்கிற பசு மாடுகள் எல்லாம் படு மோசமாய்ப் போறது தெரியேல்லப் போல....*

*எல்லாம் அந்தப் பரமேஸ்வரனுக்கே வெளிச்சம்!*

**-நரமுனி-**




# வடக்கு மாகாண இப்தார் நிகழ்வு யாழ் ஒஸ்மானியா கல்லூரியில்




வடக்கு மாகாண இப்தார் நிகழ்வு நேற்று (02) பிற்பகல் யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் இடம்பெற்றது. வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில், விருந்தினர் வரவேற்கப்பட்டு கல்லூரி வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது.

பின்னர் கல்லூரி மண்டபத்தில் இப்தார் நிகழ்வுள் இடம்பெற்றிருந்தது, இதன்போது விருந்தினர்களுக்கு குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பு பிரதி வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ், மத தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக கடற்புல் தின நிகழ்வு கிளிநொச்சியில் நடந்தது!

உலக கடற்புல் தினம் (றுழசடன ளுநய பசயளள னுயல) கடல்சார் சுற்றுச்சூழலில் கடற்புல் மற்றும் அதன் முக்கிய செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மார்ச் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

அதையொட்டி, கிளிநொச்சியில் சிறப்பு நிகழ்வொன்று நேற்று (02) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண காரியாலயத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்நிகழ்வில் பூநகரி கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தினைச் சேர்ந்த சுற்றாடல் முன்னோடிக் கழக மாணவர்கள் 75 பேர் கலந்து கொண்டனர்.

இதன்போது சுற்றாடல் கீதம் இசைக்கப்பட்டு, சிறப்புரைகள் நடைபெற்றன.

தொடர்ந்து, கடற்புற்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு, நாச்சிக்குடா கடலுக்கு மாணவர்கள் அழைத்து செல்லப்பட்டு பல விடயங்கள் செய்முறையாக காண்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வு இலங்கையில் இரண்டாவது தடவையாக நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாணப் பணிப்பாளர் மகேஷ் ஜல்தோட்ட, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் சுற்றாடல் முன்னோடி ஆலோசகர் ஜெ.நிஷாகன், பூநகரி கோட்ட சுற்றாடல் முன்னோடி ஆலோசகர் ஆ.இளங்கோ, முழங்காவில் மகாவித்தியாலய அதிபர் ப.ஆனந்தராசா, மத்திய சுற்றாடல் அதிகார சபை உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கு சின்னஞ்சூட்டல்

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் பெண்கள் பிரிவில் கனிஷ்ட மாணவத் தலைவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட கனிஷ்ட மாணவத்தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் (02) செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் எவ்.எஸ். ஸி. தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீட சிரேஸ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி எஸ்.சதாநாதனுடன் ஏனைய அதிதிகளும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.






# பாடசாலை விஞ்ஞானக் கழகம் நடாத்திய இளம் ஆய்வாளர் அறிவியல் விழா

(வி.ரி.சகாதேவராஜா)

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்லூரியின் 'இளம் ஆய்வாளர்களின் அறிவியல் விழா' வானது விஞ்ஞான ஆய்வு கூடத்தில் பாடசாலை பதில் அதிபர் கேஜயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

மாணவர்கள் தங்களது ஆக்க பூர்வமான புத்தாக்கக் கண்டு பிடிப்புக்களை காட்சிப்படுத்திருந்தனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே.கமலமோகனதாசன், டாக்டர் திருமதி. சி. குணாளினி–வைத்நிய அதிகாரி (பிரதேச வைத்திய சாலை பனங்காடு) ஆகியோர் சிறப்பு அதிதியாகவும், அதிதிகளாக ஆலையடி வேம்பு கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதிஎம். மயூரன், திருமதி. ஆர். ஜயானந்தமூர்த்தி–ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்) திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகம், திருமதி. ஏ. பவானந்தன் (விஞ்ஞானப் பாட இணைப்பாளர் திருக்கோவில் கல்வி வலயம்) ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களின் கண்டுபிடிப்புகளை பார்வையிட்டதுடன், மாணவர்களுக்கான புள்ளிகள் இடப்பட்டு சிறந்த படைப்புகளுக்கு பதக்கங்களும், பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வினை விஞ்ஞான பாட ஆசிரியர்களும், 2024 ஆம் ஆண்டின் விஞ்ஞான கழக மாணவர்களும் கலந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

# இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை

(நூருல் /ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச இளைஞர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பட்டறையின் ஆரம்ப நிகழ்வும் வருடாந்த இப்தார் நிகழ்வும் திங்கட்கிழமை இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

இளைஞர்சேவைகள்உத்தியோகத்தர் ஏ.ஆர்.றியாஸின் நெறிப்படுத்தலில் இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.எம்.அஹமட்றிஜாஸ்தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இறக்காமம் கிளையின் தலைவரும் பிரபலசொற்பொழிவாளருமான மௌலவி எம்.எச்.வஹாப் (இஸ்லாஹி) கலந்து கொண்டு விசேட சொற்பொழிவாற்றினார்.

இதன்போது இறக்காமம் பிரதேச செயலக உள வளத்துறை ஆலோசகர் ஏ.எச்.றகீப், இறக்காமம் பொலிஸ் நிலைய பதில் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஐ.ஜௌபர், அரசியல் பிரமுகர்கள் இளைஞர் சம்மேளன உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் விசேட இப்தார் நிகழ்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாடு செய்த விசேட இப்தார் நிகழ்வு நேற்று (02) கல்முனை கிரீன் பீல்ட் வீட்டுத்திட்டத்தில்அமைந்துள்ள முகைதீன் பள்ளிவாசலில் நடைபெற்றது.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கல்முனை கிரீன் பீல்ட் வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த வீட்டு திட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் தமது மத கடமைகளை நிறைவேற்றுவதற்கு உருவாக்கப்பட்ட பள்ளிவாசலே முகைதீன் பள்ளிவாசலாகும்.

நீண்ட காலமாக முஸ்லிம் கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் இருந்த இப்பள்ளிவாசல், ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவரும் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூரின் புதல்வருமான ரஹ்மத் மன்சூர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பலாபலனாக இலங்கை முஸ்லிம் கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது.

தற்போது புதிய கட்டட வசதிகளைப் பெற்றுள்ள இப்பள்ளிவாசல் பதிவு செய்யப்பட்டமைக்கான ஆவணம் முகைதீன் பள்ளிவாசல் நிர்வாக சபையினரிடம் கையளிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வில், பள்ளிவாசல் கட்டுமான பணிகளுக்கு உதவி செய்தவர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சௌபாக்கியா வீடுகள் கையளிக்கும் நிகழ்வு



(சர்ஜ/ன் லாபீர்)

சம்மாந்துறை சமூர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் /ஹுதா வங்கிப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட சௌபாக்கியா வீடுகள் கையளிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனிபா தலைமையில் இன்று(02) இடம்பெற்றது. இந் நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளர் எம்.ஏ.சி. அஹமது ஷாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் யூ.எல்.எம் சலீம்,மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையாளர்,அபிவிருத்தி உதவியாளர்,வங்கிச் சங்க முகாமையாளர்,திட்ட முகாமையாளர்,வலய முகாமையாளர்,சமூக அபிவிருத்தி உதவியாளர்,வலய உதவி முகாமையாளர்,சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,பிரதேச மட்டத் தலைவர்,வங்கி கட்டுப் பாட்டுச் சபைத் தலைவர் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# கற்பிட்டியில் ஒரே நாளில் மூன்று இப்தார் நிகழ்வுகள்

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டியில் திங்கட்கிழமை (01) ஒரே நாளில் மூன்று இப்தார் நிகழ்வுகள் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்றன.

கற்பிட்டி தில்லையூர் பாடசாலையின் நிர்வாத்தின ரின் ஏற்பாட்டில் அதிபர் எஸ் எம் அருஸ் தலைமையில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வில் பாடசாலை ஆசியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் தில்லையூர் பள்ளிவாசல் பேஷ் இமாம் றிப்கான் மௌலவி மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் , நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

மற்றுமொரு இப்தார் நிகழ்வு கற்பிட்டி காட்டுபாவா பள்ளிவாசலில் பரிபாலன சபையின் தலைவர் எம்.அஜ்மல் தலைமையில் இடம்பெற்றது இதில் ஊர் ஜமாஅத்தார்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதே தினம் மற்றுமொரு இப்தார் நிகழ்வு கற்பிட்டி கோட்டக் கல்வி காரியத்தில் அதன் பணிப்பாளர் தீப்தி பெர்ணான்டோ தலைமையில் இடம்பெற்றது. இதில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசியர் ஆலோசகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

# கல்முனையில் தனியார் வகுப்புகளை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லையினுள் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் தரம்- 1 தொடக்கம் தரம்-10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் ஏப்ரல்- 4 முதல் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கல்முனை மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

முஸ்லிம்களின் புனித நோன்பு மற்றும் தமிழ், சிங்கள புது வருடப் பிறப்பு போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகைகளினைக் கொண்ட இம்மாதமானது அதிக உஷ்ணம் நிறைந்ததாக காணப்படுகின்றது.

இருந்த போதிலும் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் பொருத்தமற்ற நேரங்களில் தொடர்ச்சியான வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருவதானது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பொதுமக்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பல்வேறு சிரமங்களை ஏற்படுத்துவதாக மத அமைப்புக்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து எமக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் தரம்- 1 தொடக்கம் தரம்-10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் 4 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்வதாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பான அறிவுறுத்தல் கடிதத்தின் பிரதிகள் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர், கல்முனை, சாய்ந்தமருது மற்றும் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



# அம்பாறை கரையோரப் பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம்

## அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு அதிகாரிகள் எச்சரிக்கை



(எம்.ஏ.ஏ.அக்தார்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்குட்பட்ட பொலிவேரியன் வீட்டுத் திட்ட கிராமம் மற்றும் கடற்கரையோரப் பிரதேசம் என்பவற்றில் அதிகளவிலான நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அதனை கட்டுப்படுத்த பொதுமக்கள் புரண ஒத்துழைப்பு வழங்குமாறும் சாய்ந்தமருது சுகாதார லைத்திய அதிகாரி டொக்டர் சகீலா இஸ்ஸடீன் தெரிவித்துள்ளார்.

தற்போது இடைவிட்ட மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இடைவிட்ட மழை டெங்குநுளம்புபெருகுவதற்குசாதகமான சூழலை தோற்றுவிக்கக்கூடும் என்ற காரணத்தினால்பிரதேசமக்கள்தங்களது வீடு மற்றும் சுற்றுப்புற சூழல், நீர் தேங்கி நிற்கும் பொருட்கள் , நீர் தேங்கும் இடங்கள் , கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தோணி, படகு போன்ற இடங்கள் குறித்து அவதானத்துடன் தொழிற்படுமாறும் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை மக்கள் வசிக்கும் குடியிருப்பு பிரதேசங்களில் உள்ள வடிகான்களில் நீண்ட காலத்திற்கு கழிவுநீர் தேங்கியுள்ளதாகவும் இது குறித்து கல்முனை மாநகரசபையின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.




# அல்ஹிதாயா மகளிர் சங்கத்தினருக்கு பேரீச்சம் பழங்கள் வழங்கிவைப்பு

(நூருல் /ஹதா உமர்)

நிந்தவூர் பிரதேச செயலாளர்சட்டத்தரணிஏ.எம். லத்தீப்அவர்களின்வழிகாட்டல் மற்றும்ஆலோசனைகளுக்கு அமைவாக மகளிர்அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர். றிஸ்வானுல் ஜன்னா தலைமையில் நிந்தவூர் 02 அல்ஹிதாயா மகளிர் சங்க தலைவி எம்.ரி. நவுஷாவின் முயற்சியின் விளைவாக நிந்தவூரைச் சேர்ந்த தன்னார்வ தனவந்தர் ஒருவரின் பங்களிப்புடன் அல்ஹிதாயா மகளிர் சங்க அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஈச்சம் பழங்கள் இன்று (02.04.2024) வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்விற்கு நிந்தவூர் பிரதேச பெண்கள் சிறுவர் பிரிவின் உத்தியோகத்தர்களான உளவளத் துணை உதவியாளர்கள் டி.எம். ஹஃப்ரத் மற்றும் ஏ.ஆர். தஹ்லான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.






## பைனா விளையாட்டுக்கழகம் இப்தார் நிகழ்வை நடாத்தியது

(நூருல் /ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை பைனா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நிகழ்வு கழகத்தின் தலைவர் ஜே. றுஜிகான் தலைமையில்அட்டாளைச்சேனை நிலாமியா வித்தியாலயத்தில் நேற்று (2) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ். எம்.சபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

ஆலோசகர் உப பொலிஸ் பரிசோதகர் யூ.எல்.ஆப்தின், திடீர் மரண விசாரனை அதிகாரி எஸ்.எம். றுனைஸ், முகாமையாளர் எஸ்.சபீர் அலி, அட்டாளைச்சேனை பைனா விளையாட்டுக் கழக செயலாளர் ஏ.ஜி.இக்ராம், பொருளாளர் ஏ.பி. முபீன், உபதலைவர் ஏ.கே.அஜ்வத், உட்பட கழக வீரர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்

## நிலத்தினை சீராக்கிய வாகனச் சாரதி கைது



புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனுமதியின்றி , பாரிய கனரக வாகனத்தின் உதவியுடன் நிலத்தினை சீராக்கிய, வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன்,வெக்கோ வாகனம்கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

ஈவினைப் பகுதியில், கிராம சேவையாளரின் அனுமதி உடன் குறித்த வேலை இடம்பெற்று கொண்டிருந்த பொழுது, அங்கு வந்த புவி சரிதவியல் அளவை மற்றும்சுரங்கப்பணியக அதிகாரிகள் வாகனத்தின் சாரதியுடன், முரன்பட்டு வேலைகளை இடை நிறுத்தி உள்ளனர்.

குறித்த வேலைக்கு பணியகத்தின் அனுமதி தேவையில்லைஎனகூறப்படுகிறது.

நிலத்தினை மட்டப்படுத்துவதற்கு கிராம சேவையாளரின் அனுமதி போதுமென கருதப்பட்ட நிலையில், குறித்த அதிகாரிகள், தங்களிடமும் அனுமதி பெற வேண்டும் என தெரிவித்து வாகனத்தை அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்று முற்படுத்தினர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2024இல் வெளியிடப்பெற்றது.